டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பசலைக்குள்ளாக எடுக்கவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. இது நிறைவேற்றப்படும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே சொன்னேன். ஓர் உறுப்பினர் தான் கேள்வி கேட்கலாம் என்று. அனைவரும் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) முறைப்படி எப்போதும் 2 கவன ஈர்ப்புகளுக்கு மேல் எடுப்பது இல்லை. இன்றைக்கு 42 எடுக்க இருக்கிறோம். (குறுக்கீடு).

12. குற்றாலம் மலைப் பகுதியில் பன்றிகளால் விவசாய நிலத்திற்கு ஏற்படும் சேதம்.

திரு. டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குற்றாலம் மலைப் பகுதியிலிருந்து, காட்டுப் பன்றிகள் இறங்கி குற்றாலம் புளியரை, வடகரைப் பகுதிகளிலுள்ள நெற்பயிருக்கு விளைக்கும் சேதம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டத்தில் காடுகளை ஒட்டியுள்ள நிலங்களில் உள்ள பயிர்களைக் காட்டுப் பன்றிகள் அழித்து வருகின்றன என்றும், 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினங்களில் காட்டுப்பன்றிகளும் சேர்க்கப்பட்டுள்ளதால் இவற்றை விவசாயிகள் வேட்டையாடவோ, சுட்டுக் கொல்வதற்கோ முடியவில்லை, என்றும், ஆகவே மேற்கூறிய சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள இவ்விலங்கை அப் பட்டியல்களிலிருந்து நீக்கி விட்டால் விவசாயிகள் காட்டுப் பன்றிகளை வேட்டையாடி அல்லது கொன்று தங்கள் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதால் காட்டுப் பன்றியை வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் பட்டியல்களிலிருந்து நீக்குமாறு அரசுக்கு வேண்டுகோள் வந்தது. இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு, காட்டுப் பன்றிகளை மேற்படி சட்டத்தின் பட்டியல்கள் III மற்றும் IV இல் இருந்து பட்டியல்

கவன ஈர்ப்புகள்

(திரு. ஆர். எம் வீரப்பன்)

V-க்கு மாற்ற முடிவு செய்து, 6–12–1982 ஆம் நாளிட்ட வனம் மற்றும் மீன்துறை அரசாணை (நிலை) எண் 1594-ல் உரிய ஆணையும், அறிவிக்கையும் வெளியிடப்பட்டன. இந்த அரசாணைப்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் சரணாலயம் மற்றும் ஒதுக்கக் காடுகளுக்கு வெளியே உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளோ, முள்ளம்பன்றிகளோ பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால் விவசாயிகள் அவற்றைச் சுட்டுக் கொன்று தங்கள் பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். சரணாலயம் மற்றும் ஒதுக்கக் காடுகளுக்குள்ளே உள்ள நிலங்களில் பயிர்களுக்கு இவ் விலங்குகளால் சேதம் ஏற்படுமாயின் தலைமை வனவிலங்குக் காப்பாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்று விலங்குகளை வேட்டையாடி அல்லது சுட்டுக் கொன்று பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

2. குற்றாலம் மலைப் பகுதிகளிலிருந்து காட்டுப் பன்றிகள் இறங்கி குற்றாலம், புளியரை, வடகரைப் பகுதிகளிலுள்ள நெற் பயிர்களுக்குச் சேதம் விளைவிப்பது குறித்து அப்பகுதி விவசாயி களிடமிருந்து விவரங்கள் ஏதும் சமீபத்தில் வனத் துறையின ருக்குக் கிடைக்கவில்லை. பொதுவாக காட்டுப் பன்றிகள் இரவு நேரங்களில் விவசாய நிலங்களில் புகுந்து தொல்லை கொடுப் பதுண்டு. அச்சமயங்களில் விவசாயிகள் தாரை, தப்பட்டை மூலம் ஒலியெழுப்பியும், பட்டாசுகள் வெடித்தும் பன்றிகளை விரட்டி விடுவார்கள். வனத்துறையினரின் ஆலோசனையை ஏற்று, சில விவசாயிகள் பழகிய நாய்களைக் கொண்டும் பன்றி களை விரட்டி பயனடைந்துள்ளனர். இது தவிர, மேலே குறிப்பிட்டபடி திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் பயிர்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளையும், முள்ளம் பன்றிகளையும் கொல்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி உண்டு.

(13) சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரின் இல்லம் தாக்கப் பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கே. பி. இராம லிங்கம், திருவாளர்கள் ப. ந. இராமச்சந்திரன், எச். ஜி. ஆறுமுகம், கூடலூர் இ. வி. வேலு, மு. சின்னக்குழந்தை ஆகி யோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ''24–4–1986 அன்று நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருக்கும் போது சிதம்பரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. ஆர். கணபதி அவர்களின் வீட்டிற்குள் நகரசபை தி.மு.க. உறுப்பினர் திரு. ராஜு மற்றும் சுமார்